APRIL 2026

62602/244C3A/
245C3A/246C3A/
247C3A/248C3A/
251C3A/217C3A/
218C3A

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. Define the term Share.

   பங்கு என்ற பதத்தை வரையறு.

2. 70% of an issue of 5,00,000 shares of Rs. 10 each is underwritten by M/s K and S, applications totaled 4,00,000 shares. Is there a liability of the Underwriters?

   ரூ.10 மதிப்புள்ள 5,00,000 பங்குகளின் வெளியீட்டில் 70% M/s K மற்றும் S ஆல் ஒப்புறுதி செய்யப்படுகிறது. மொத்தம் 4,00,000 பங்கு விண்ணப்பங்கள் ஆகும். ஒப்புறுதி செய்பவர்களுக்கு ஏதேனும் பொறுப்பு உள்ளதா?

3. Give journal entry of debentures when issued at discount and redeemable at premium.

   தள்ளுபடியில் வெளியிட்டு மற்றும் முனைமத்தில் மீட்டெடுக்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்களுக்கான குறிப்பேட்டுப் பதிவுகளை தருக.

4. What is the Capital Redemption Reserve, and why is it created during the redemption of preference shares?

   மூலதன மீட்பு இருப்பு என்றால் என்ன, முன்னுரிமைப் பங்குகளை மீட்பின் போது அது ஏன் உருவாக்கப்படுகிறது?

5. What do you understand by company final accounts?

   நிறும இறுதி கணக்குகள் பற்றி நீவீர் அறிவது யாது?

6. What is interim dividend?

   இடைக்கால பங்காதாயம் என்றால் என்ன?

7. Define Goodwill.

   நற்பெயர் வரையறு.

8. X Ltd., has earnings per share of Rs.60 and is quoted at Rs.480. Y Itd., which is a similar firm has a earnings per share of Rs. 48. What should be the value of the share of Y Ltd.,?

எக்ஸ் லிமிடெட், ஒரு பங்கிற்கு ரூ. 60 ஈட்டியது மற்றும் ரூ. 480 என மேற்கோள் காட்டப்பட்டது. ஒய் லிமிடெட், இது போன்ற ஒரு நிறுவனம் பங்கு ஒன்றுக்கு ரூ. 48 ஈட்டியது. ஒய் லிமிடெட் பங்கின் மதிப்பு என்னவாக இருக்க வேண்டும்?

9. Define Ind AS.

இந்திய கணக்கியல் தரம் வரையறு.

10. What is the applicability of International Financial Reporting Standards (IFRS) in India?

இந்தியாவில் சர்வதேச நிதி அறிக்கை தரநிலைகளின் (IFRS) பொருந்தக்கூடிய தன்மை என்ன?

11. What is an underwriting commission?

ஒப்புறுதி கழிவு என்றால் என்ன?

12. What is 'Cum Interest' in the context of debenture purchase?

கடனீட்டுப் பத்திரம் வாங்கும் சூழலில் 'வட்டி கூட்டுத்தொகை' என்றால் என்ன?

PART B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE questions.

13. Kalayan kumar Co. Ltd. was formed with a capital of Rs.10,00,000 in Rs. 10 shares, the whole amount being issued to the public. The underwriting of these shares was as follows:

A – 35,000; B – 30,000; C – 20,000; D – 10,000; E – 3,000; F – 2,000

All the marked application forms were to go in relief of the underwriters whose stamp they bear. The applications forms marked by the underwriters were

A – 10,000; B – 22,500; C – 20,000; D – 7,500; E – 5,000; F – Nil

Applications for 20,000 shares were received on forms not marked. Draw up a statement showing the number of shares each underwriter had to take up.

கல்யாண் குமார் லிமிடெட் பங்குகள் ரூ. 10 என ரூ. 10,00,000 முதலுடன் அமைக்கப்பட்டது, முழு தொகையும் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டது. இப்பங்குகள் பின்வருமாறு ஈட்டுறுதி செய்யப்பட்டது.

A – 35,000; B – 30,000; C – 20,000; D – 10,000; E – 3,000; F – 2,000

குறிக்கப்பட்ட அனைத்து விண்ணப்ப படிவங்களும் ஈட்டுறுதியாளர்களின் முத்திரையைத் தாங்கி நிவாரணம் பெற வேண்டும். விண்ணப்ப படிவங்கள் ஈட்டுறுதியாளரால் பின்வருமாறு குறியீடப்பட்டது.

A – 10,000; B – 22,500; C – 20,000; D – 7,500; E – 5,000; F – Nil

குறிக்கப்படாத படிவங்களில் 20,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. ஒவ்வொரு ஈட்டுறுதியாளரும் எடுக்க வேண்டிய பங்குகளின் எண்ணிக்கையைக் காட்டும் அறிக்கையை வரையவும்.

14. New Limited issues 1,000, 6% debentures of Rs. 100 each. Give journal entries in each of the following cases:

(a) Issued at par, redeemable at par,

(b) Issued at a discount of 6%, but redeemable at par,

(c) Issued at premium of 5%, but redeemable at par,

(d) Issued at a discount of 4%, repayable at a premium of 5%.

நியூ லிமிடெட் ரூ. 100 வீதம் 1,000, ,6% கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டது. பின்வரும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் குறிப்பேட்டு பதிவுகளை தருக.

(அ) முகமதிப்பில் வெளியிட்டு முகமதிப்பில் மீட்டல்

(ஆ) 6% தள்ளுபடியில் வெளியிட்டு, முகமதிப்பில் மீட்டல்,

(இ) 5% முனைமத்தில் வெளியிட்டு, முகமதிப்பில் மீட்டல்,

(ஈ) 4% தள்ளுபடியில் வெளியிட்டு, 5% முனைமத்தில் திருப்பிச் செலுத்துதல்.

15. The following balances extracted from the company records. Calculate the remuneration of the managing director at 5% of the Net profit, after charging such commission.

	Rs.
Net Profit	38,786

		Rs.
	Items Considered for arriving at the above net profit :	
(a)	Provision for taxation	39,000
(b)	Managing Director's remuneration paid	12,000
(c)	Formation expenses written off	4,000
(d)	Directors fees	2,500
(e)	Provision for doubtful debts	1,200
(f)	Depreciation allowable as per income tax rules	12,000
(g)	Depreciation written off	12,800
(h)	Ex-gratia payment to employee (without any liability to the company)	2,000

நிறுவனத்தின் பதிவுகளிலிருந்து பின்வரும் இருப்புகள் எடுக்கப்பட்டது. கழிவுக்குப்பின் உள்ள நிகர லாபத்தில் நிர்வாக இயக்குநரின் ஊதியத்தை 5% கணக்கிடுக.

		ரூ.
	நிகர லாபம்	38,786
	மேற்கண்ட நிகர லாபத்தை அடைவதற்கு கருதப்படும் விவரங்கள் :	
(அ)	வரிவிதிப்பு	39,000
(ஆ)	நிர்வாக இயக்குநருக்கு செலுத்திய ஊதியம்	12,000
(இ)	அமைப்பு செலவுகள் போக்கெழுதியது	4,000
(ஈ)	இயக்குநர்கள் கட்டணம்	2,500
(உ)	வாரா ஐயக்கடன் ஒதுக்கு	1,200
(ஊ)	வருமான வரி விதிகளின்படி அனுமதிக்கப்பட்ட தேய்மானம்	12,000
(எ)	தேய்மானம் நீக்கியது	12,800
(ஏ)	ஊழியருக்கு மிகை ஊக்கத்தொகை செலுத்தியது (நிறுவனத்திற்கு எந்தப் பொறுப்பும் இல்லாமல்)	2,000

16. From the following information, calculate the value per equity share :

1,000 9% preference shares of Rs. 100 each	Rs. 1,00,000
1,00,000 equity shares of Rs. 5 each Rs. 2 per share paid up	Rs. 2,00,000
Expected profits per year before tax	Rs. 1,09,000
Rate of tax	50%
Transfer to general reserve	20% of the net profits.

பின்வரும் தகவல்களிலிருந்து ஒரு பொதுநிலை பங்குக்கான மதிப்பைக் கணக்கிடு

1,000 9% முன்னுரிமை பங்குகள் ரூ. 100 வீதம்	ரூ. 1,00,000
1,00,000 பொதுநிலை பங்குகள் ரூ. 5 வீதம்	
ஒரு பங்கிற்கு ரூ. 2 செலுத்தியது	ரூ. 2,00,000
வரிக்கு முன் ஓர் ஆண்டுக்கு எதிர்பார்க்கப்படும் இலாபம்	ரூ. 1,09,000
வரி விகிதம்	50%
ஒவ்வொரு ஆண்டும் பொதுக்காப்புக்கு மாற்றுவது	நிகர லாபத்தில் 20%

17. Explain the objectives of Indian Accounting Standards (Ind AS).

இந்திய கணக்கியல் தரநிலைகளின் (Ind AS) நோக்கங்களை விளக்கவும்.

18. Draft a balance sheet of a company in prescribed form as per revised schedule VI of Companies act.

நிறுவனங்கள் சட்டத்தின் திருத்தப்பட்ட அட்டவணை VI இன் படி பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் ஒரு நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பை வரையவும்.

19. What are the various methods of valuation of shares?

பங்குகளை மதிப்பிடுவதற்கான பல்வேறு முறைகள் யாவை?

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. A Ltd. invited applications for 10,000 shares of Rs.100 each at a discount of 5% payable as follows:

On application	Rs.25
On allotment	Rs.34
On first & final call	Rs.36

Applications were received for 9,000 shares and all of these were accepted. All moneys due were received except the first and final call on 100 shares which were forfeited. Of these forfeited shares, 50 shares were reissued at the rate of Rs.90 as fully paid. Show necessary journal entries in the books of the company.

A லிமிடெட் ரூ.100 வீதம் 10,000 பங்குகளை 5% தள்ளுபடியில் பின்வருமாறு செலுத்துவண்ணம் விண்ணப்பங்களை வரவேற்றது:

விண்ணப்பத்தில்	ரூ .25
ஒதுக்கீட்டில்	ரூ.34
முதல் மற்றும் இறுதி அழைப்பில்	ரூ.36

9,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு இவை அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 100 பங்குகளுக்கான முதல் மற்றும் இறுதி அழைப்பைத் தவிர அனைத்து தொகையும் பெறப்பட்டது, இப்பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில், 50 பங்குகள் ரூ.90 வீதம் முழுவதும் செலுத்தப்பட்டவையாக மறுவெளியீடு செய்யப்பட்டது. நிறுவன ஏடுகளில் தேவையான குறிப்பேட்டு பதிவுகளை காட்டுக.

21. The balance sheet of Wallace Ltd. as on 31st December 2021 was as under:

Liabilities	Rs.	Assets	Rs.
Share capital :		Sundry assets	3,65,000
1,000 Redeemable preference shares of Rs.100 each	1,00,000	Bank Balance	1,40,000
2,000 Equity shares of Rs. 100 each, fully paid	2,00,000		
General Reserve	80,000		
Profit & Loss account	50,000		
Sundry creditors	75,000		
	5,05,000		5,05,000

On this date, the preference shares were redeemed at par. Journalize and prepare balance sheet after redemption.

டிசம்பர் 31, 2021 நிலவரப்படி வாலஸ் லிமிடெட்டின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
பங்கு முதல் :		பல்வகை சொத்துக்கள்	3,65,000
1,000 மீட்பு முன்னுரிமைப் பங்குகள் ரூ. 100 வீதம்	1,00,000	வங்கி இருப்பு	1,40,000
2,000 பொதுநிலை பங்குகள் ரூ.100 வீதம் முழுமையாக செலுத்தப்பட்டது	2,00,000		
பொது காப்பு	80,000		
இலாப நட்டக் கணக்கு	50,000		
பற்பல கடனீந்தோர்கள்	75,000		
	5,05,000		5,05,000

இந்த தேதியில், முன்னுரிமைப் பங்குகள் முகமதிப்பில் மீட்டெடுக்கப்பட்டன. மீட்புக்கு பின் குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து இருப்பு நிலைக் குறிப்பை தயாரிக்கவும்.

22. The following ledger balances were extracted from the books of Varun Ltd., as on 31.3.2018.

Land Building Rs. 2,00,000; 12% Debentures Rs. 2,00,000; Share capital Rs.10,00,000 (equity shares of Rs. 10 each fully paid up); Plant & Machinery Rs. 8,00,000; Goodwill Rs.2,00,000; Investment in shares of Raja Ltd. Rs. 2,00,000; General reserve Rs.1,95,000; Stock in trade Rs. 1,00,000; Bills receivable Rs.50,000; Debtors Rs. 1,50,000; Creditors Rs. 1,00,000; Bank Loan (unsecured) Rs. 1,00,000; Provision for tax Rs. 50,000; Proposed dividend Rs. 55,000. Prepare the Balance sheet of the as per revised schedule VI.

31.3.2018 தேதியின்படி வருண் லிமிடெட் ஏடுகளில் இருந்து பின்வரும் பேரேட்டு இருப்புகள் எடுக்கப்பட்டன.

நிலம் மற்றும் கட்டிடம் ரூ. 2,00,000: 12% கடனீட்டுப் பத்திரங்கள் ரூ.2,00,000; பங்கு முதல் ரூ.10,00,000 (பொதுநிலை பங்குகள் ரூ.10 வீதம் முழுவதும் செலுத்தப்பட்டது) ; பொறி மற்றும் இயந்திரங்கள் ரூ.8,00,000; நற்பெயர் ரூ. 2,00,000; ராஜா லிமிடெட் நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு ரூ. 2,00,000; பொதுக்காப்பு ரூ. 1,95,000; வியாபார சரக்கிருப்பு ரூ. 1,00,000; பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டு ரூ.50,000; கடனாளிகள் ரூ. 1,50,000; கடனீந்தோர்கள் ரூ. 1,00,000; வங்கி கடன் (பிணையமில்லாதது) ரூ. 1,00,000; வரி ஒதுக்கீடு ரூ.50,000; கோரப்பட்ட பங்காதாயம் ரூ. 55,000.

திருத்தப்பட்ட அட்டவணை VI இன் படி இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கவும்

23. The following information is given:

(a) Average capital employed Rs. 1,50,000

(b) Normal rate of profit 10%

(c) Present value of annuity of Re. 1 for five years at 10% as Rs.3.78

(d) Net profits for five years: 1st year Rs. 14,400; 2nd year Rs.15,400; 3rd year Rs.16,900; 4th year Rs. 17,400 and 5th year Rs. 17,900. The profits included non-recurring profits on an average basis of Rs. 1,000 out of which it was deemed that even recurring profits had a tendency of appearing at the rate of Rs.600 p.a.

You are required to calculate the goodwill:

(i) As per annuity method

(ii) As per five years' purchase of super profit; and

(iii) As per capitalization of super profit method.

பின்வரும் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

(அ) சராசரியாக பயன்படுத்தப்பட்ட முதல் ரூ. 1,50,000

(ஆ) சாதாரண இலாப விகிதம் 10%

(இ) ரூ.1 க்கு ஐந்து ஆண்டுகளில் 10% க்கு ஆண்டு தொகை அட்டவணையின் நடப்பு மதிப்பு ரூ. 3.78 ஆகும்.

(ஈ) ஐந்து ஆண்டுகளுக்கான நிகர லாபம்: 1 ஆம் ஆண்டு ரூ. 14,400; 2 ஆம் ஆண்டு ரூ. 15,400; 3 வது ஆண்டு ரூ. 16,900; 4 வது ஆண்டு ரூ. 17,400 மற்றும் 5 ஆம் ஆண்டு ரூ. 17,900 ஆகும்.

இலாபங்கள் சராசரி அடிப்படையில் மீண்டும் மீண்டும் பெறாத ரூ.1,000 இலாபங்களை உள்ளடக்கியது இவற்றில் தொடர்ச்சியான இலாபங்கள் ஆண்டுக்கு ரூ. 600 என்ற விகதத்தில் தோன்றும் போக்கைக் கொண்டிருந்தன என்று கருதப்பட்டது.

நீங்கள் நற்பெயரை கணக்கிட வேண்டும்:

(i) ஆண்டுத்தொகை முறையில்

(ii) உயர் இலாபத்தில் ஐந்தாண்டு கொள்முதல் என்ற அடிப்படையில்; மற்றும்

(iii) உயர் இலாபம் முதல் படுத்து முறையின் அடிப்படையில்.

24. Explain the significance of Ind AS and its impact on the Indian financial reporting landscape.

இந்திய கணக்கியல் தரத்தின் முக்கியத்துவம் மற்றும் இந்திய நிதி அறிக்கை நிலப்பரப்பில் அதன் தாக்கத்தை விளக்குக.

———————